**தேசிய தினச் செய்தி**

வணக்கம்.

1. 2008-ம் ஆண்டின் உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் சிங்கப்பூர் பொருளியல், தற்போது வலுவடைந்து வருகிறது.

2. 2011-ம் ஆண்டின் முதற் பாதியில், சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.9 விழுக்காடு வளர்ச்சி கண்டது. வேலையின்மை விகிதம் வெகுவாகக் குறைந்து 2.1 விழுக்காடாக உள்ளது.

3. சிரமங்கள் சில எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2011-ம் ஆண்டுக்கான வளர்ச்சி விகிதம், சீராக, 5-லிருந்து 6 விழுக்காடாக இருக்கும் என முன்னுரைக்கப்படுகிறது.

4. நமது கடந்த ஐந்து ஆண்டுகள், நிச்சயமற்ற தன்மைகளையும், துரித மாற்றங்களையும் கொண்டிருந்தன.

5. நமது பொருளியல் சிறப்பாக இருந்தபோது, நாம் மிகச் சிறந்த பல ஆண்டுகளை அனுபவித்தோம்.

6. நமது ஊதியங்களும் உயர்ந்தன.

7. இருப்பினும், குறிப்பாக உலகப் பொருளியல் நெருக்கடியின்போது, சில கவலைக்கிடமான சந்தர்ப்பங்களையும் அனுபவித்தோம்.

8. இதற்கு முன்பு கண்டிறாத, அத்தகைய கொந்தளிப்பான காலக் கட்டத்தில் சிங்கப்பூரர்களைப் பாதுகாக்க, அரசாங்கம் ஆன அனைத்தையும் செய்தது.

9. நிறுவனங்கள் தொடர்ந்து செயல்படவும, வேலைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் நாம் "வேலை உதவித் தொகை" திட்டத்தை அறிமுகம் செய்தோம்.

10. நீண்ட கால வாய்ப்புகளை அடையாளம் கண்டு, எதிர்காலத்துக்குத் தேவையான வழிமுறைகளை வகுக்க, நாம் "பொருளியல் உத்திகள் குழுவை", அமைத்தோம்.

11. இந்த ஆண்டு, வாழ்க்கைச் செலவு உயர்ந்துகொண்டு போகும் நிலையில், குடும்பங்கள் அவற்றைச் சமாளிக்க உதவும் வகையில், "Grow & Share" எனப்படும் "வளர்ச்சி-பகிர்வு" திட்டத்தை, நடைமுறைப் படுத்தினோம்.

12. ஊழியர்களின் வேலைத் திறனை மேம்படுத்தி, வேலை வாய்ப்புகளை அதிகரிக்க, அவர்களுக்குத் தொடர்ந்து மறு பயிற்சி வழங்குகிறோம்.

13. சிரமப்படும் குடும்பங்களுக்குப் பல உதவிகளும் வழங்கப்படுகின்றன.

14. மொத்தத்தில், அரசாங்கத் திட்டங்கள் பயன் அளித்துள்ளன. பல ஆண்டுகளாக நாம் சேமித்து வைத்துள்ள வலுவான சேமிப்புகள், நமக்கு நம்பிக்கையுடன் "Resilience Package" திட்டத்தை உறுதியுடன் செயல்படுத்த வழி செய்தன.

15. கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்தும் நமது வளர்ச்சி உத்திகளும், கூடுதல் மதிப்புள்ள துறைகளுக்குள் பிரவேசித்தலும், சிங்கப்பூரர்களுக்கு நல்ல, புதிய வேலைகளை உருவாக்கி உள்ளன.

16. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையோடு ஒப்பிடும்போது, பெரும்பாலான குடும்பங்கள் தற்போது கூடுதல் வருமானம் ஈட்டுகின்றன.

17. எனினும், பல திட்டங்களை நிறைவேற்றிய போதும், அவற்றையும் மீறி, வெளியிலிருந்து வந்த சிரமங்களின் தாக்கத்திலிருந்து, சிங்கப்பூரர்களை நாம் முழுமையாகப் பாதுகாக்க முடியவில்லை.

18. துரிதமாக மாறிவரும் சூழ்நிலையில், பொருளியலை நிலைபெறச் செய்வது, வேலைகளைக் காப்பாற்றுவது, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வது போன்ற அவசரப்

பிரச்சினைகள் மீது அரசாங்கம் முதலில் கவனம் செலுத்த வேண்டி இருந்தது.

19. சில அரசாங்கக் கொள்கைகள் தாமதமாயின.

20. அவற்றைத் தற்போது கவனித்து வருகிறோம்.

21. வீடுகளுக்குக் காத்திருக்கும் கால நேரத்தைக் குறைக்கவும், வீடுகளின் விலைகள் கட்டுபடியாக இருப்பதை உறுதி செய்யவும், மேலும் அதிகமான HDB வீடுகளைக் கட்டி வருகிறோம்.

22. பொதுப் போக்குவரத்துச் சேவையின் தரத்தை மேம்படுத்த MRT ரயில் பாதைகளையும் பஸ் சேவைகளையும் விரிவு படுத்துகிறோம்.

23. வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் குடியேறிகளின் வருகையை மட்டுப் படுத்துகிறோம்.

24. சிங்கப்பூரர்களுக்கே முதலிடம் என்பதை அதன் மூலம் தெளிவு படுத்துகிறோம்.

25. பெரிதும் நிச்சயமற்ற சூழ்நிலையில், சிங்கப்பூரர்களுக்கு மேலும் சிறந்த ஆதரவு வழங்க நாம் நமது சமூகப் பாதுகாப்பு திட்டங்களை மறு பரிசீலனை செய்து வருகிறோம்.

26. இவற்றின் விளைவுகள் உடனே ஏற்பட்டுவிடாது.

27. எனினும், அடுத்த சில ஆண்டுகளில் முன்னேற்றங்களை நாம் காண முடியும்.

28. இருப்பினும், குறிப்பாக ஓர் அம்சம் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

29. நாம், சிங்கப்பூரர்களுக்கே எப்போதும் முதல் இடம் கொடுப்போம் என்றாலும் வெளிநாட்டவரை நாம் ஒதுக்கிவிடக்கூடாது.

30. உலகை நாம் திறந்த மனப்போக்குடன் அணுகி வந்துள்ளோம்.

31. பொருளியல் போட்டித் தன்மைக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப துடிப்புடன் நாம் செயல்பட்டு வந்துள்ளோம்.

32. அதனால் சிங்கப்பூர் வளம் பெற்றது. அவ்வாறே நாம் முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.

33. சிங்கப்பூரர்களுக்கு வேலைகளை உருவாக்கி உள்ளோம்.

34. ஒரு துடிப்புமிக்க நகரமாக நம்மை நாம் உருவாக்கி உள்ளோம்.

35. நமக்குள் நாமே என்ற ஒரு சிறிய சுற்று வட்டத்துக்குள் நம்மை அடக்கிக் கொண்டோ, அல்லது நம் பிரச்சினைகள் எல்லாமே வெளி நாட்டவர்களால்தான் என்ற நினைப்போடோ இருந்துவிட முடியாது.

36. நாம் உலகத்தோடு ஒன்றி வாழ வேண்டும்.

37. திறன்களும் சிந்தனைகளும், அவை எங்கிருந்து வந்தாலும், அவற்றை நாம் தொடர்ந்து வரவேற்க வேண்டும்.

38. அப்போதுதான், நாம் நம் வளப்பத்தைத் தொடர முடியும்.

39. மேலும் சிறந்த சிங்கப்பூரை அனைவருக்கும் உருவாக்க முடியும்.

40. உள் நாட்டில் உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் அதே சமயத்தில், உலகப் போக்கையும் தொடர்ந்து கவனித்து, நமது தொலை தூர எதிர்காலத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

41. சீனா, இந்தியா ஆகியவற்றைப் பின்பற்றி ஆசியா தொடர்ந்து வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

42. இருப்பினும், உலக நிலவரம் தொடர்ந்து நிச்சயமற்றதாக உள்ளது.

43. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் GREECE-ஐ கடன் பிரச்சினையிலிருந்து காப்பாற்றியது.

44. இருந்தாலும், ஐரோப்பிய கடன் பிரச்சினைகள் இன்னும் தீர்ந்த பாடில்லை.

45. அமெரிக்கப் பொருளியல் தொடர்ந்து மந்தமாக இருக்கிறது. அமெரிக்க அதிபரும் காங்கிரஸும் கடன் உச்சவரம்பை உயர்த்த இணங்கி உள்ளனர்.

46. ஆனால், வரிகளை உயர்த்தும், செலவுகளைக் குறைக்கும் கடினமான தீர்மானங்களை ஒத்திப் போட்டுள்ளனர்.

47. நில நடுக்கம், சுனாமி பேரிடர் ஆகியவற்றிலிருந்து மீளும் கூடுதல் சுமை ஜப்பானுக்கு உள்ளது.

48. இந்த மூன்று முக்கிய பொருளியல்களும், தங்களின் உள்நாட்டுச் சவால்களைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் தலைமைத்துவத்தைத் தேடும் பணியில், தள்ளாடி வருகின்றன.

49. இது அந்தப் பொருளியல்கள் மீது சுமையைச் சுமத்தி, உலக வாய்ப்பு வளங்களை நலிவுறச் செய்யும்.

50. அடுத்த சில ஆண்டுகள், இன்னும் துரிதமான மாற்றங்களையும், ஆச்சரியங்களையும் கொண்டு வரும்.

51. அவற்றை உணர்ந்து, வெளி நிகழ்வுகளுக்கான எதிர் நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

52. மேலும், சிங்கப்பூரின் வெற்றி வாய்ப்புகளை அதிகரிக்கும் இலக்கையும் நாம் வகுக்க வேண்டும்.

53. நீண்ட கால அடிப்படையில், நாம் நமது பணிகளைத் தொடர வேண்டும்.

54. நாம் நம் திறமைகளை மேம்படுத்திக் கொள்வோம்.

55. உற்பத்தித் திறனை உயர்த்துவோம். அதன் மூலம் நாம் நமது பொருளியலை வளர்ப்போம்.

56. வெளிநாட்டு ஊழியரின் தேவையைக் குறைப்போம்.

57. நமது இளையர்களுக்கு நன்கு கல்வி போதிப்போம். நமது மூத்த ஊழியர்களுக்குத் திறன் மிகுந்த மறு பயிற்சி அளிப்போம்.

58. நாம் வாழ்வதற்கு ஒரு தலைசிறந்த சூழலை உருவாக்குவோம்.

59. “பூங்காவில் ஒரு நகரம்”, “அனைத்து சிங்கப்பூரருக்கும், துடிப்புமிக்க ஒரு செழிப்பான இல்லம்” – இந்த இலக்குகளை எட்டுவதற்கு நம்மிடம் பல திட்டங்கள் உள்ளன.

60. இந்தக் குறிப்பிட்ட கொள்கைகளுக்கும் அப்பால், நமது விவகாரங்களை நாம் கையாளும் முறையும் மாற வேண்டும்.

61. நமது சமுதாயம் மாறி வருகிறது. தங்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து அதிகமான மாறுபட்ட கருத்துக்களும், விவாதங்களும் வேண்டும் என புதிய தலைமுறை சிங்கப்பூரர்கள் விரும்புகின்றனர்.

62. அவற்றுக்கான தீர்வுகளை முடிவு செய்வதில் தங்களுக்கு இன்னும் பெரிய பங்கு வேண்டும் என்கின்றனர்.

63. இதை நான் வரவேற்கிறேன்.

64. யோசனைகளையும் திட்டங்களையும் கொண்டுள்ள சிங்கப்பூரர்களை, மேலும் நாங்கள் சிறப்பாகச் செயலாற்றுவதற்கு உதவுமாறு அழைக்கிறேன். உங்கள் கற்பனை, ஆற்றல், திட்டம் ஆகியவற்றைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் சமுதாயத்தின் எல்லா பிரிவையும் எட்டும்.

65. இது திட்டங்களையும் முடிவுகளையும் மேம்படுத்தும்.

66. நமது ‘இல்லம்’ என்று அழைக்கும் இந்த நாட்டின் மீதான கடப்பாட்டையும், பற்றையும் பலப்படுத்தும்.

67. இன்னும் அதிகமான, மாறுபட்ட கருத்துப் பரிமாற்றத்தால், மேலும் துடிப்பான ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும்.

68. ஆனால், அவை நம்மிடையே பிளவை ஏற்படுத்தி நம்மைப் பலவீனப் படுத்தவும் முடியும்.

69. நாம் நமது பொது இடைவெளியைப் பெரிதாக்க வேண்டுமே தவிர, நமது வேறுபாடுகளைப் பெரிதாக்கி, பிளவுபட்ட ஓர் இல்லமாக ஆகிவிடக் கூடாது.

70. ஒற்றுமையாக இருப்பதன் மூலம், நம்மால் சவால்களைத் திறமையாகச் சமாளிக்க முடியும். மற்ற நாடுகளைவிட நம்மால் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட முடியும்.

71. குறிப்பாக இளைய சிங்கப்பூரர்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.

72. நீங்களே எங்கள் எதிர்காலம். நீங்கள் இணையம் மற்றும் சமூக ஊடகக் காலத்தைச் சேர்ந்தவர்கள்.

73. பெரியவர்களோடு ஒப்பிடும்போது, உங்களிடம் மாறுபட்ட அனுபவங்கள், கருத்துக்கள் மற்றும் லட்சியங்கள் உள்ளன. மேலும், முந்தைய தலைமுறைகள் கடினமாக உழைத்து உருவாக்கிய நாடு உங்களுக்குச் சொந்தமாகும்.

74. நீங்கள் வெற்றி பெற, எங்களால் முடிந்த அளவுக்கு நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம்.

75. உங்களின் லட்சியம், ஆர்வம், கடப்பாடு ஆகியவை மாற்றத்தைக் கொண்டு வரும்.

76. உங்கள் கனவுகளை எட்டுவதற்கும், நினைத்ததை முடிப்பதற்கும் உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கும். பல இளைய சிங்கப்பூரர்கள் பகிர்வு மனப்பான்மை கொண்ட ஓர் உயரிய நோக்கத்திற்காக சேவை ஆற்றுவதற்கான ஓர் அழைப்பை உணர்வதையும் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

77. நீங்கள் மனித நேய நிவாரணப் பணிகளில் தொண்டு ஆற்றுகிறீர்கள். பசுமைக் காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்கள். முதியவர்கள் மீதும் வசதி குறைந்தவர்கள் மீதும் அக்கறை செலுத்துகிறீர்கள்.

78. இந்தச் சிங்கப்பூர் உணர்வு நம்மை ஒரே மக்களாகப் பிணைத்திருக்கும்.

79. கடந்த காலத்தில், நம் மூதாதையர்கள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை உருவாக்க அரும்பாடு பட்டனர். சொந்தக் காலில் நின்று, உழைத்து முன்னேறி உயிர்வாழ முடியும் என்பதை, உலகுக்கு எடுத்துக் காட்டுவதே, அவர்களின் பொது இலக்காக இருந்தது.

80. அந்த உத்வேகம் ஒரு மொத்த தலைமுறை சிங்கப்பூரர்களையும் ஒன்றிணைத்து ஊக்குவித்தது.

81. நாம் இப்போது நம் வரலாற்றின் ஒரு முக்கிய காலக் கட்டத்தில் இருக்கிறோம்.

82. அனைத்துலகமயமான உலகில், நமது கல்வித் தகுதியையும், உற்பத்தித் திறனையும் உயர்த்துவதன் மூலம், நாம் தொடர்ந்து போட்டித் திறனுடன் இருக்க முடியும்.

83. நமது திறனாளர் எண்ணிக்கையைப் பெருக்குவது. திறந்த மனப்பான்மை உள்ள ஒரு துடிப்புமிக்க சமுதாயமாக இருப்பது – இவற்றால் நாம் முன்னோக்கிச் செல்ல முடியும்.

84. ஆக முக்கியமாக, அனைவரும் பரஸ்பரத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதன் மூலமும், நம் எல்லோருடைய வாழ்க்கையும் மேம்பட, கையோடு கை கோர்த்து பணியாற்றுவதன் மூலமும், நாட்டு நிர்மாணத்தின் முடிவில்லா சலால்களை நாம் வெல்ல முடியும்.

85. இந்தத் தீவு நம் எல்லோருடைய இல்லம்.

86. சுதந்திரம் பெற்ற கடந்த 46 ஆண்டுகளில், நாம் அதிகம் சாதித்திருக்கிறோம்.

87. நம் அனைவருக்கும் இன்னும் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தையும் இன்னும் ஒரு சிறப்பான இல்லத்தையும் உருவாக்குவதற்கு, நாம் தொடர்ந்து ஒன்றுசேர்ந்து பணியாற்றுவோம்.

88. அனைத்து சிங்கப்பூரர்களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான தேசிய தின வாழ்த்துகள்.

வணக்கம்.